**தலைப்பு 176 - துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப் 176 - துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் நிதிக் கூற்றுக்களன் மூலம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மீண்டுவரும் செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதி செயலாற்றல் கூற்றில் (ஏ.சீ.ஏ.எப்) மீண்டுவரும் செலவுகளின் கீழ் உள்ள சம்பளங்கள் கூலிகள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களின் மொத்தம் ரூபா 104,734,316 ஆகக் காட்டப்பட்டிருந்தும் அது தொடர்பான 05 பதிவுகளின் பெறுமதியின் மொத்தம் ரூபா 99,956,727 ஆகும். அதற்கிணங்க ரூபா 4,777,589 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தும் அவ்வாறே ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்தம் ரூபா 123,235,042 ஆகக் காட்டப்பட்டிருந்தும் அது தொடர்பான 06 பதிகளின் பெறுமதியின் மொத்தம் ரூபா 128,012,631 ஆகும். அதற்கிணங்க ரூபா 4,777,589 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்யப்பட்ட நிதி செயலாற்றல் கூற்று 2024-05-09 ஆந் திகதிய பதிலின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆண்டு தொடர்பான செலவுகளை சரியாக வகைப்படுத்தி நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கி சமர்ப்பித்தல் வேண்டும். |

**(ஆ) பிரதான கணக்கீட:டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிபடுத்தல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான வெளிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தயாரித்தல்.<br><br>அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக நிதிப்பிமாணம் 135-139 இன் பிரகாரம் அதிகாரம் ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்டது. அதிகாரம் ஒப்படைத்தல் மற்றும் ஆளணியினர்களுக்கிடையே வேலைகளை உள்ளக ரீதியாக மேற்பார்வை செய்யும் வகையில் கடமைகளை ஒப்படைத்தலினை மேற்கொள்ளல் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.<br><br>அந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை காலத்திற்குப் பொருத்தமான தேவைபபாட்டின் அடிப்படையிலும் உள்ளகக் கணக்காய்வின் வழிகாட்டலின் அடிப்படையிலும் காலரீதியாக மீளாய்வினை மேற்கொண்டு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வினைத்திறனாக மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டன என 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வெண்டும். |

| | | |
|---|---|---|
| | சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இதன் மூலம் தெரிவிக்கிறேன். | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் 05 செலவு விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 13,200,000 ஆன நிதி ஏற்பாட்டிலிருந்து மொத்தமாக ரூபா 8,348,480 நிதி எற்பாடு ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 46 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடைய அளவில் காணப்பட்டது. | 176-1-2-0-1403-0/11 ஆம் இலக்க செலவு விடயத்தில் இலங்கை துறைமுக அதிகார சபையினால் மின்சாரம் மற்றும் நீருக்காக விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்படாமையும் 176-1-1-0-1302-0/11, 176-1-2-0-1205-0/11 மற்றும் 176-1-1-0-1403-0/11 ஆம் இலக்க செலவு விடயங்களில் எதிர்பார்த்தவாறு செலவு செய்ய முடியாமையும் 176-1-1-0-1401-0/11 ஆம் இலக்க செலவு விடயத்தில் பதவிநிலை உத்தியோகத்தர்களில் பலர் போக்குவரத்துப் படிகளை பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக அரசாங்க வாகனங்களை பயன்படுத்துவதற்கு தெரிவு செய்யாதிருந்ததனால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது. | நி.பி 50 இற்கு இணங்க சரியாக மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) 05 செலவு விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் மொத்தமாக ரூபா 310,200,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த நிதி ஏற்பாட்டிலிருந்து எந்த பயன்பாடும் செய்யப்படாது நிதி எற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | 176-1-1-0-1203-0/11 ஆம் இலக்க செலவு விடயத்தில் உத்தியோகத்தர்கள் சீருடைப்படியினை வேண்டிக்கொள்ளாமை, 176-1-1-0-2002-0/11 ஆம் செலவு விடயத்தில் இயந்திரங்களில் மூலதனத் தன்மையான திருத்தம் செய்தல்களை மேற்கொள்ளப்படாமை, 176-1-2-0-1508-0/11 ஆம் இலக்க செலவு விடயத்தில் எதிர்பார்த்தவாறு செலவு | நி.பி 50 இற்கு இணங்க சரியாக மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்தல் இடம்பெற்றிருக்காமை, 176-2-4-21-2302-0/12 ஆம் இலக்க செலவு விடயத்தில் முன்னைய தகமை அவணங்கள் மற்றும் கால நீடிப்புச் செய்வதற்காக இந்தியாவின் EXIM வங்கியின் அங்கீகாரத்தினை எதிர்பார்த்து இருப்பதனால் செயற்திட்டம் ஊகிப்புச் செய்த ஒதுக்கீட்டு கால அட்டவணையின் பிரகாரம் பாதீட்டு நிதி எற்பாடு பயன்படுத்தப்படாமை, 176-2-4-27-2506-0/11 ஆம் செலவு விடயத்தில் முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சிற்கு நிதி ஏற்பாடு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அந்த அமைச்சினால் செலவுகளை கணக்கீடு செய்தல் காரணமாக இருந்தன. | |
| (இ) | 06 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட மொத்தமாக ரூபா 70,101,520 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் மொத்தமாக ரூபா 61,109,314 தொகையான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமையால் வழங்கப்பட்ட நிதி எற்பாட்டில் 30 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடைய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | 176-1-1-0-1403-0/11 ஆம் இலக்க செலவு விடயத்தில் 1/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 0.12 மில்லியன் நிதி ஏற்பாட்டினை சேமிப்பதற்கு தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு கட்டுப்பட்டுள்ளது. மேலும் எதிர்பார்த்தவாறு ஆண்டின் போது இச்செலவு விடயத்தின் கீழ் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருக்காமை, 176-1-2-0-1002-0/11 ஆம் இலக்க செலவு விடயத்தில் 1/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 1 மில்லியன் நிதி எற்பாடு சேமிப்பும் இச்செலவு விடயத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அமைச்சினை ஒன்றுசேர்க்கும் போது அங்கீகரித்த ஆளணியினை மட்டுப்படுத்தியதன் காரணமாக உத்தியோகத்தர்களை நிறுவனங்களுக்கு | நி.பி 50 இற்கு இணங்க மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இணைத்துக்கொள்ளலும் நிதி ஏற்பாடு சேமிக்கப்படுவதற்கு காரணமாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் கடப்பாடுகளுக்கும் இதில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது. 176-1-2-0-1203-0/11 ஆம் இலக்க செலவு விடயத்தில் எதிர்பார்த்தவாறு செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருக்காமை, 176-1-2-0-1403-0/11 ஆம் இலக்க செலவு விடயத்தில் துறைமுக அதிகார சகைக்குச் செலுத்துவதற்காக நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை 176-02-4-21-2506/17 ஆம் இலக்க செலவு விடயத்தில் 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுககான நிறுத்திவைத்தல் வரிக்காக ரூபா 6.1 மில்லியன் பணம் ஆலோசனையாளருக்கு விடுவிக்கப்பட்டது. இதனால் 2023 ஆம் ஆண்டில் செயற்திட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. அதனால் வரியை செலுத்துதலும் அதற்கிணங்க விடுவிக்கப்படவில்லை | |
| (ஈ) | அமைச்சின் 176-02-4-23-1509 ஆம் இலக்க செலவு விடயம் தொடர்பாக மீளாய்வாண்டில் ரூபா 119,550,000 குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அச்செலவு விடயத்தின் கீழ் 131,356,467 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது வழங்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டில் 110 சதவீதமாக இருந்தது. | 176-02-4-23-1509 ஆம் இலக்க செலவு விடயத்தில் 2023/12/30 ஆந் திகதியளவில் செலுத்த வேண்டிய கடன் வட்டி மற்றும் தவணைப் பண கொடுப்பனவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி எற்பாடு போதியதாக இல்லாமை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்த முடியாமையால் செலுத்த வேண்டிய தொகைக்கு மேலதிகமாக தண்டப்பணமும் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை காரணமாக உள்ளது. | நி.பி 50 இற்கு சரியாக மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2023 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் பாதீட்டின் மூலம் கைத்தொழில் பூங்காக்கள்/ வலயங்களுக்காக உட்பட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக 176-02-4-27-2506 செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 10,000,000 நிதி ஏற்பாடு ஆண்டின் இறுதி வரையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதி ஏற்பாடு முதலீட்டு மேம்பாட்டு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | வழங்கிய நிதி எற்பாட்டில் சேமிக்கப்படுதல் சம்பந்தமாக விசாரித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டை சிறந்த மட்டத்தில் பயன்படுத்ததல் மற்றும் அங்கீகரித்த நிதி ஏற்பாட்டு எல்லையை மிகைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை மேற்கொள்வதனை தவிர்க்கும் குறிக்கோளில் வழங்கப்பட்ட 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் (ஆ) பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு அடையாளங்காணப்பட்ட கடப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அக்கடப்பாடுகளுக்குரிய பொருட்கள் அல்லது சேவைகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் அதற்காக கொடுப்பனவு செய்வதற்கு உள்ள பணம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்திய வேலைகளின் பெறுமதி பொறுப்புக்களாக பதியவேண்டும் என காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2024 சனவரி மற்றும் பெப்ரவரி மாத வவுச்சர்களைப் பரீட்சித்த போது 2023 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்களின் 110 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 3,088,383 தொகை இந்த தொடக்க மாதங்களின் போது தீர்த்துவைக்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் ரூபா 1,561,914.71 பெறுமதிக்குரிய பொறுப்புக்கள் மாத்திரம் | 04/2023 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக்கு உங்கள் கவனம் கோரப்படுவதுடன் அதில் குறிப்பிட்டவாறு இரண்டாவது மற்றும் இறுதி குறைநிரப்பு கணக்கு பொழிப்பு அரசாங்க கணக்குகள் திணைக்களத்தறிகு 2024-01-30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். எனவே 2024-01-30 ஆந் திகதிக்குப் பின்னர் (இறுதி குறைநிரப்பு கணக்கு பொழிப்பினை சமர்ப்பித்ததன் பின்னர்) கணக்குகள் பிரிவிற்கு கிடைக்கின்ற வவுச்சர்களை பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டும் இயலுமை இல்லை. | மேலதிக நேரவேலை படி, பிரயாண செலவுகள், ஏனைய படிகள், எழுது கருவிகளும் அலுவலக தேவைப்பாடுகளும், தபால் மற்றும் தொடர்பாடல்கள் ஆகிய செலவு விடயங்கள் கடப்பாடுகளுக்கு உரியது என்பதனால் அந்த செலுத்த வேண்டிய பணத்தனை ஏற்கனவே அடையாளங்காணுதல் வேண்டும். |

பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் ரூபா 1,526,468 குறைத்து காட்டப்பட்டிருந்தது.

.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்புகள் | | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br><br>நிதிப்பிரமாணம் 1645 | திணைக்கத்தின் வாகனங்கள் ஒரு பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பொறுப்புகூற வேண்டிய ஒரு உத்தியோகத்தரின் பொறுப்பில் வைத்திருக்கப்பட வேண்டியதுடன் அந்த உத்தியோகத்தரினால் தமது பொறுப்பில் உள்ள ஒவ்வொரு வாகனத்திற்காக தமது அலுவலகத்தின் 267 ஆவது பொது படிவத்திகு இணங்க வாகன சம்பவ குறிப்பு புத்தகத்தினை வைத்து அதில் நாளாந்தம் குறிப்புக்கள் எழுதப்படுதல் வேண்டும். நுகரப்படுகின்ற எரிபொருளின் அளவு, வருடாந்த அனுமதிப்பத்திரம், வாகனத்தின் பொறுப்பாண்மையினை மாற்றுதல், பயணம் தொடர்பான மாதாந்த பொழிப்பு குறிப்பு, பரீட்சிப்பு உத்தியோகத்தரின் குறிப்பு தொடர்பான | இந்த அமைச்சின் 42 வாகனங்களுக்காக 267 ஆவது பொது படிவத்திற்கு இணங்க வாகன சம்பவ குறிப்பு புத்தகம் பேணப்படுவதுடன் மேற்கூறிய கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிட்ட வருடாந்த அனுமதிப்பத்திரம் தொடர்பான குறிப்புக்கள் தற்பொழுது நாளதுவரையாக்கப்பட்டு காணப்படுகின்றது என தயவாக குறிப்பிடுவதுடன் அதில் குறிப்பிட்ட நுகரப்படுகின்ற எரிபொருளின் அளவு, வாகனத்தின் பொறுப்பாண்மையினை மாற்றுதல், பயணம் தொடர்பான மாதாந்த பொழிப்பு மற்றும் பரீட்சிப்பு உத்தியோகத்தரின் குறிப்பு என்பன 2024 மே மாதத்திலிருந்து நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் தயவாக தெரிவிக்கிறேன். | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 1645 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விபரம் பூரணமற்றதாக இருந்ததுடன் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அரசாங்க நிருவாக சுற்றிக்கை | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | ஒவ்வொரு 12 மாதகால எல்லைக்கு ஒரு தடவை அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது இன்ஜின் சம்பந்தமான பிரதான திருத்தங்களுக்குப் பின்னர் என்ற விடயங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திற்குப் பின்னர் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மிண்டும் பரீட்சிக்கப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்தும் 2023 ஆம் அண்டில் அமைச்சின் வாகனங்களுக்காக அச்சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் நுகர்வினை பரீட்சித்தல் மேற்கொள்ப்பட்டிருக்கிவல்லை. | அமைச்சின் 02 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் இன்னும் சில வாாகனங்களின் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் அமைச்சின் பல வாகனங்கள் நகர எல்லைக்குள் மாத்திரம் ஓடுவதன் காரணமாக மேற்கூறிய சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நகர எல்லைக்குள் மற்றும் வெளியே 80 கிலோ மீற்றர் எல்லை என்ற வரையறைகளுக்கு இணங்க எரிபொருள் பரீட்சிப்பினை மேற்கொள்ளும் பிரச்சினைக்கு பொருத்தமான மாற்று வழியினை ஈடுபடுத்தி அந்த நடவடிக்கையானது அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் நிருவாக உத்தியோகத்தர் மற்றும் போக்குவரத்து உத்தியோகத்தரின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 2016 திசெம்பர் 29 ஆந் திகதி 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2018 நவம்பர் 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க | ஆளணியினரின் செயலாற்றலினை மதபிபீடு செய்வதற்காக நிறுவனத்திற்கு | ஆண்டிற்காக செயலாற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை என | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க |

| | | | |
|---|---|---|---|
| அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி | பொருத்தமாக தயாரிக்கப்படுகின்ற வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையானது நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஆளணியினர்களுக்காகவும் கையொப்பமிடுதல் 2018 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அமைச்சில் 2023 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிடுதல் மேற்கொள்ளப்பட்டிருருக்கவில்லை. | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான காரணத்தை பின்வருமாறு சமர்ப்பிக்கிறேன்.<br><br>02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள செயலாற்றல் உடன்படிக்கைப் படிவத்திற்கு இணங்க உத்தியோகத்ர்களின் செயலாற்றலினை மதிப்பீடு செய்தலினை ஆண்டின் ஆரம்பத்தின் போது மேற்கொள்வது சிக்கலானதுடன் செயலாற்றல் உடன்படிக்கையினை செய்வது ஆண்டின் இறுதிக்குள் மேற்கொள்ள முடியாது எனத் தோன்றுகின்றது.<br><br>எனவே 2023 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் உடன்படிக்கை தயாரிக்கப்படாததுடன் எதிர்காலத்தில் அச்சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க இந்த அமைச்சிற்கு பொருத்தமான வகையில் செயலாற்றல் படிவத்தினை திருத்தம் செய்வது 2024 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2008 மே 22 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் (விசேட) 1550/7 ஆம் இலக்க மேலதிக சாதாரண வர்த்தமானியின் 07 மற்றும் 08 ஆம் பிரமாணங்களுக்கு இணங்க இலங்கையிலிருந்து ஆரம்பிக்கின்ற விமானப் பயணங்களுக்காக இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட அல்லது விற்கப்படுகின்ற ஒவ்வொரு பயணிகள் அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக அமெரிக்க டொலர் 60 மிகைக் கட்டணம் (OSS Levy) அல்லது அப்பணத்திற்கு சமமான தொகை அறவிட வேண்டியதுடன் அவ்வாறு அறவிடப்படுகின்ற மிகைக் கட்டணமானது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் 2008 இலிருந்து 2024 மார்ச் வரையான காலத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா 22,113,189,430 தொகையான மிகைக் கட்டணமானது சிவில் விமான சேவைகள் அதிகாரசபையினால் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது அதிகாரசபையின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ‘‘இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் செலவுகளுக்காக நிதியை வழங்குதல்’’ என்ற தலைப்பில் துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த 2024-01-30 ஆந் திகதிய விஞ்ஞாபம் தொடர்பாக 2024-02-19 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க வெளிநாட்டு விற்பனைகள் மிகை அறவீட்டு வருமானமானது திரண்ட நிதியத்திற்கு 2024-0510 ஆந் திகதி செலவு வைக்கப்பட்டது. | தமது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களிடமிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 வெிநாட்டு உதவி செயற்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| காங்கேசன்துறை துறைமுகத்தை மறுசீரமைப்புச் செய்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்குமம் இந்திய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி EXIM வங்கிக்குமிடையே அமெரிக்க டொலர் 45.27 மில்லியன் கடனை பெற்றுக்கொள்வதற்கு டொலர் கடன் உடன்படிக்கை செய்துகொள்வதற்கு 2018 சனவரி 10 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டிருந்தது. 2021 | முன் தகமை ஆவணங்கள் மற்றும் கடனை நீடிப்புச் செய்வதற்காக இந்தியாவின் EXIM வங்கியின் அங்கீகாரத்தினை எதிர்பார்த்து இருப்பதனால் செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டின் போது நிறுத்தப்பட்டுள்ளது. எனவே உத்தேசிக்கப்பட்ட ஒதுக்கீட்டு கால அட்டவணைக்கு இணங்க | திட்டங்களை தயாரிப்பதற்கு முன்னர் அச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு செல்லும் போது அவசியமானதாக இருக்ககூடிய |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன் உடன்படிக்கையில் கையொப்பமிட்டு 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் துறைமுகத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அக்கடன் தொடர்பாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய ொடுப்பனவுகளுக்காக 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டில் காங்கேசந்துறை துறைமுகத்தை மறுசீரமைப்புச் செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 360 மில்லியன் நிதி எற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிலிருந்து எந்த செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க நிதி எற்பாடு 100 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | பாதீட்டு நிதி எற்பாட்டினை பயன்படுத்துவதற்கு முடியாதுள்ளது. | அங்கீகாரங்கள் மற்றும் இணக்கப்பாடுகள் தொடர்பாக முன்னரே கவனித்து பார்க்க வேண்டும். |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2022 ஏப்ல் 06 ஆந் திகதிய PG9548 ஆம் இலக்க கெப் வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் அதனை திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காக அமைச்சினால் ரூபா 587,480 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் காப்புறுதி நிறுவனத்தினால் ரூப 250,000 தொகையினை மாத்திரம் செலுத்தவுதற்கு இணங்கி கொள்ளப்பட்டிருந்தது. வாகனம் விப:த்துக்குள்ளாகியதனால் ஏற்பட்ட நட்டத்ததை மீளளிப்புச் செய்து கொள்வதற்காக காப்புறுதி நிறுவனத்திடமிருந்து முழுமையான இழப்பீட்டுப் பணத்தையும் பெற்றுக்கொள்வதற்கு அல்லது சாரதியினால் செலுத்தி தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு இருக்க வேண்டிய நிபந்தனைகளையேனும் நிறைவேற்றிக்கொள்ளாமையின் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 337,480 நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2022-04-06 ஆந் திகதி PG-9548 ஆம் இலக்க கெப் வாகனத்தினை திருத்தம் செய்வதற்காக ரூபா 587,480 தொகையில் காப்புறுதி இழப்பீடாக ரூபா 250,000 பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் மேற்கூறிய திருத்தங்களுக்காக செலவு செய்யப்பட்ட நிலுவைப் பணமான ரூபா 337,480 தொகையினை அறவீடு செய்வதற்காக எடுக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுத்ததன் பின்னர் நி.பி 108 மற்றும் 109 இன் பிரகாரம் அந்த நிலுவைப் பணத்தை நட்டங்கள் மற்றும் சேதங்களாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சாரதிகளுக்கு கடமைகளை ஒப்படைக்கும் போ்து வாகனத்தை முறைப்படியாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தியின் பிரகாராம் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி 03 மாதங்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்குரிய 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் மொத்தமாக ரூபா 119,200 கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | 2023-12-31 ஆந் திகதி வரையும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்த இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி உறுதியாக குறிப்பிடப்படாத 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 119,200 கடன் மீதியானது 1990 ஆம் ஆண்டில் தசாப்தங்கள் அளவு பழமையானதாகும். அக்கடன் மீதியை பழிவழிப்பதற்கு அரசாங்க நிதி திணைக்களத்திடம் வேண்டிக் கொள்ளப்பட்டதுடன் அதன் சிபாரிசின் பிரகாரம் கடன் மீதியை பழிவழிப்பதற்கு ஒரு குழுவினை நியமித்து விடயத்தினை ஆய்வு செய்து குழு அறிக்கை 2019-10-18 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. கடைசியாக 2023-11-01 ஆந் திகதி இக்கடன் மீதியை பதிவழிப்பதற்கு ஆலோசனை கோரி அரசாங்க நிதி திணைக்களத்திற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டது. | நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அமைச்சினால் அறவிட வேண்டியிருந்த ரூபா 293,470 கடன் மீதி 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டு வந்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த மீதியினை அறவீடு செய்வதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது. இந்த தீர்க்கப்படாத கடன் மீதிகள் தொடர்ச்சியாக கடன் பதிவேடுகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தன. | வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 293,470 கடன் மீதியானது அவருக்கு எதிராக ஊழல் அல்லது மோசடிகளை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினல் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் அந்த உத்தியோகத்தர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு சமாதானத்திற்கு கொண்டு வரப்பட்டு அவருக்கு தகமையுள்ள | நிலுவைக்கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பணிக்கொடையை செலுத்த வேண்டி ஏற்படுமாயின் அறவீடு செய்வதற்கு ஆயத்தமாக இருந்தும் 2022-03-08 ஆந் திகதி நடைபெற்ற வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் அவர் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே இக்கடன் மீதியை அறவீடு செய்வதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தற்பொழுது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. | |

### 3.5 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட சூரியவெவ விளையாட்டு மைதானத்தினை நிர்மாணிப்பதற்ாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய கடனை தீர்த்துவைப்பதற்காக 2017 திசெம்பர் 14 ஆந் திகதி இலங்கை துறைமுக அதிகார சபையினால் மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா ரூபா 3,950,858,870 கடன் தொகைக்கு வருடாந்தம் 33.30 சதவீத வட்டியுடன் (வட்டி வீதம் மாற்றமடையலாம்) 15 ஆண்டுகள் காலத்தினுள் செலுத்த வேண்டியதான ரூபா 11,796,877,071 தொகையினை செலுத்துவதற்காக ஒருங்கிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அமைச்சரவை திர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டிலிருந்து கடன் வட்டியை செலுத்துவதற்கும் 2021 ஆம் ஆண்டிலிருந்து கடன் வட்டி மற்றும் தவணைப் பணத்தை செலுத்துவதற்காக தேவையான நிதி ஏற்பாட்டு வருடாந்த பாதீட்டின் மூலம் இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கடன் தவணைப் பணமும் வட்டியுமாக ரூபா 991,193,533 பணம் அமைச்சின் வங்கி வட்டி மற்றும் நிதிச் | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் ஒரு மேலதிக வேலையாக சூரியவெவ கிரிகெட் விளையாட்டு மைதானத்தினை நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய நிலுவைப் பணம் செலுத்தப்படாததனால் ஒப்பந்தக்காரர் கடன் தீர்ப்பனவு நடைமுறைக்குச் சென்றிருந்ததனால் அதனை இரத்துச் செய்து ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்வதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் MNPEA/2017/132 ஆம் இலக்க 2017-10-04 ஆந் திகதிய அமைச்ரவை விஞ்ஞாபனத்திற்கு மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு, அப்போது காணப்பட்ட நிதி மற்றும் ஊடக அமைச்சு மற்றும் துறைமுகங்கள் கப்பல்துறை | அமைச்சின் குறிக்கோள்களுக்கு இணக்கமற்ற நடவடிக்கைகளுக்காக நிதி எற்பாட்டினை பயன்படுத்தாதிருக்க வேண்டும் என்பதற்கான பொறுப்பினை உத்தியொகத்தர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

செலவுகளாக 176-2-4-23-2509 ii ஆம் இலக்க (இலங்கை துறைமுக அதிகாரசபை, சூரியவெவ, சர்வதேச கிரிகட் விளையாட்டு மைதானம்- அரசாங்க நிறுவனம்) செலவு விடயத்தின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. இச்செலவு அமைச்சின் மீண்டுவரும் செலவில் 73.62 சதவீதமாகும். மூலதனச் செலவில் 26.99 சதவீதமும் மொத்த செலவில் 46.62 சதவீதமும் ஆகும்.

இந்த விளையாட்டு மைதானம் நிர்ணயிக்கட்டுள்ள காணி 2011 ஏப்ரல் 26 ஆந் திகதி அரசாங்கத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை கிரிகட் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சிற்கு அதில் எந்த உரிமையும் இல்லை. இதற்கிணங்க அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இச்செலவுகள் அமைச்சின் குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்று இருந்தன.

அமைச்சின் MNPEA/2017/158 ஆம் இலக்க 2017-11-20 ஆந் திகதிய ஒருங்கிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 3,950,856,870 பணம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு நேரடியாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அக்கடன் தொகையையும் வட்டியையும் 15 ஆண்டுகளுக்குள் செலுத்துவதற்காக தேவையான பாதீட்டு நிதி ஏற்பாடு நிதி வெகுசன ஊடக அமைச்சினால் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டது.

அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டிலிருந்து கடன் வட்டியை செலுத்துவதற்கும் 2021 ஆம் ஆண்டிலிருந்து கடன் வட்டி மற்றும் தவணைப் பண கொடுப்பனவிற்காக தேவையான நிதி ஏற்பாடு வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது.